ISSN:2582-9599



# திருவள்ளுவர் நெறியில் சாந்தலிங்கர் காட்டும் கொல்லாமை நெறி

**முனைவர் ப. சங்கீதா**
**உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை**
**தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க்கல்லூரி**
**பேரூர் கோவை – 641 010**
**மின்னஞ்சல் : sangee607@gmail.com**

**35**

ஆய்வு நோக்கம் - திருவள்ளுவர் மற்றும் சாந்தலிங்கனார் வழியில் கொல்லாமை நெறியினை ஒப்பிட்டு நோக்கில் காணுதல்

திறவுச்சொல் - சீலத்தவர் - வைராக்கியம ;- கொல்லாமை, கொலை மறுத்தல் - சாந்தலிங்கர் – திருக்குறள்- வேதம்- அறநெறி – அவிரோதம்

ஆய்வுச்சுருக்கம்

எவ்வுயிருக்கும் தீங்கிழைத்தலும் கொலை செய்தலும் அறமற்ற செயலாகும். இக்கொள்கையை திருக்கயிலாய மரபில் தோன்றி 'மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூரில்' சீலத்தவர் போற்றத் திருமடம் அமைத்த சாந்தலிங்கப் பெருமானும் வள்ளுவர் வகுத்த கொல்லாமை நெறியில்;; கொலை மறுத்தல் எனும் நூல் பாடியுள்ளார். கொல்லாமை> பக்தி> துறவு> அவிரோதம் எனும் நாற்பொருளை விளக்கும் கொலை மறுத்தல்> வைராக்கிய சதகம்> வைராக்கிய தீபம்> அவிரோத உந்தியார் எனும் இந்நான்கு நூல்களும் உலகப்பொதுமறையாம் திருக்குறளையும்> திருமுறைகளையும் வேதமாகக் கொண்டு போற்றுவனவாக அமைந்துள்ளன. கொல்லுதலும் புலால் மறுத்தும் வாழும் உயிர்களுக்குத் தெய்வம் துணை நிற்கும். குருவருளாகிய திருவருள் கொலைமை தள்ளி அறம் சார்தற்கு வழிகாட்டும். இம்மை> மறுமை வாழ்வுக்குரிய தன்மைகளையும் மென்மேலும் உயர்ந்து மேலெனப்;படும் வானுலகப் பதவிகளைத் தருவதாயினும் மேல் வழி உணர்ந்து கீழ்மை விலக்கி அருள் நெறியில் வாழும் சான்றோர்கள் உயிரைக் கொல்வதை ஏற்க மாட்டார்கள். ஒரு பெண்ணை ஆணாக மாற்றும் தவ ஆற்றல் உடையவராயினும் பதைபதைக்க உயிரினங்களைக் கொன்று உண்ணும் கருத்துடையவர்களை, இரும்பாகிய கொலைவாளினால் ஓர்உயிர் நலிந்து அழியக் கொன்று உண்பவர்களைப் பிறர் தலைவர் என்று போற்றினாலும் அவரை ஞானியென்று கூறுவதாகாது. ஐம்புல ஆசைகளை நீக்கி முழுத் துறவு மேற்கொண்டு செம்பொருள் காண்போரும் தவறாது மேற்கொள்ள வேண்டிய நெறி கொல்லாமை என்னும் அறநெறிநெறியாகும்.

முன்னுரை

இறைவன் திருவடியைத் தொழுது எழுவதே 'கற்றதனால் ஆய பயன்' என்பது வள்ளுவம் உணர்த்தும் நெறியாகும். இதனால் மானுடம் பெறும் பயன் 'வையத்துள் வாழ்வாங்கு' வாழ்தலாகும்.

இந்நன்னெறியைக் கூறும் தமிழ்மறையாகத் திருக்குறள் விளங்குகின்றது. இது யாவருக்கும் மேல்வழி உணர்த்திக் கீழமை விளக்கும் அருமறையாகத் திட்பநுட்பம் செறிய உலக மக்களுக்குப் பொதுவான அறக்கருத்துக்களால் இயற்றப்;பட்டுள்ளது. எவ்வுயிருக்கும் தீங்கிழைத்தலும் கொலை செய்தலும் அறமற்ற செயலாகும். இக்கருத்தினைத் திருவள்ளுவரும் திருக்குறளில் வலியுறுத்தியுள்ளார். திருவள்ளுவர் காலத்திற்குப் பின் தோன்றிய சில அருளாளர்கள் இக்கொள்கையைத் தங்களது காலத்திலும் வலியுறுத்தி நூல்கள் படைத்துள்ளனர். அவர்களுள் திருக்கயிலாய மரபில் தோன்றி ‘மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூரில்’ சீலத்தவர் போற்றத் திருமடம் அமைத்த சாந்தலிங்கப் பெருமானும் வள்ளுவர் வகுத்த கொல்லாமை நெறியில்;; கொலை மறுத்துக் கூறும் வகையாக இக்கட்டுரை அமைகிறது.

**சாந்தலிங்கர்**

சாந்தலிங்கப் பெருமான் துறையூர் சிவப்பிரகாசரைத் தனது குருவாகக் கொண்டவர். வீரசைவ நெறியை அனைவருக்கும் கற்பிக்க வேண்டும் என்ற குருவின் ஆணையைத் தலைமேற்கொண்டு மேலைச்சிதம்பரமாம் மிக்க புகழ்ப்பேரூரில் திருமடத்தை நிறுவினார். குருவை இறைவனாகவே கண்ட சாந்தலிங்கர் “தில்லைப் பதிமேய சிவப்பிரகாசனேயோ” என்று பாடினார். உலகையே விற்று அளித்தாலும் ஈடாகாத சிறப்புடைய நான்கு தத்துவ நூல்களை இவ்வுலகிற்கு அளித்தவர். கொல்லாமை> பக்தி, துறவு> அவிரோதம் எனும் நாற்பொருளை விளக்கும் கொலை மறுத்தல் வைராக்கிய சதகம் வைராக்கிய தீபம் அவிரோத உந்தியார் எனும் இந்நான்கு நூல்களும் உலகப்பொதுமறையாம் திருக்குறளையும்> திருமுறைகளையும் வேதமாகக் கொண்டு போற்றுவனவாக அமைந்துள்ளன.

**திருக்குறள் வேதம்**

சாந்தலிங்கர் தமது நூல்களில் பற்றுக்களில் இருந்து விடுபட்டவரே இறைவன் திருவடியைச் சென்று சேர இயலும் என்று கூறியுள்ளார். அப்பற்றுக்களை அகப்பற்று, புறப்பற்று என இரண்டாகப் பிரித்து, இந்த இரண்டிலிருந்தும் விடுபட செப்பரும் கயிலைக்குருமரபில் வந்த குருவை நாடி அருள்பெற வேண்டும் என்றும் மேலும் நிலையற்ற உலகவாழ்வினைக் குறிப்பிடும்பொழுது திருமுறைகளையும் திருக்குறளையும் கையாண்டு நிலையாமையை விளக்கியுள்ளார். மேலும் மெய்யியல் கருத்துக்களை அறிஞர்களிடையே பரவச்செய்ய வேண்டும் என்ற நோக்கில் தான் இயற்றிய நூல்களிலும் திருக்குறளை வேதம் என்று போற்றகின்றார்.

**கொலை மறுத்தல்**

ஐம்பெருங்கடவுளர்களாக விளங்கும் முழுமுதலே குருவடிவில் வந்து என் சிறுமை அறிந்து பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து அருள் செய்தமையைச் சாந்தலிங்கப் பெருமான்>

“ஒருபரம் இச்சிறியனேற்கும் தரும் இருதாள்”

கொலை மறுத்தல்> பா.எண் - 01

தலைமிசைக்கொண்டு குருவருளாகிய திருவருள் உணர்த்த கொலைமை தள்ளி அறம் சார்தற்கு வழிகாட்டும் முறையில் கொலை மறுத்தலை அருளியுள்ளார்.

அருமறை ஆகமம் என்பது திருக்குறளும் திருமுறைகளும் ஆகும். திருவள்ளுவருக்குப்பின் சமயச்சான்றோர்கள் பலரும் தெரிவிக்காத கொலைமறுத்தலை அருளியுள்ளார் சாந்தலிங்கர்.

**;எல்லா உயிரும் தொழும்**

தீயவினைகளில் எல்லாம் தலையாய தீயவினை கொலைச்செயல். இது பெருந்துன்பங்களை விளைவிப்பது ஆகும். கொல்லுதலும் புலால் மறுத்தும் வாழும் உயிர்களுக்குத் தெய்வம் துணை நிற்கும் என்பதனை,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்" குறள் - 260

என்கிறார் திருவள்ளுவர். இத்திருக்குறள் நெறியினையே சாந்தலிங்கரும் அருளுடைமையை மேற்கொண்டு தீவினைக்கு அஞ்சி வாழ்பவர்க்கு உண்மை நூல் காட்டிய வழியில் தெய்வம் துணைநிற்கும் என்கிறார். திருக்குறளைச் சாந்தலிங்கர் உண்மை நூல் என்று தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொன்னூல் ஆகிய தொல்காப்பிய நெறியில், அருளொடு புணர்ந்த அகற்சியானும் என்னும் இலக்கண மரபினை ஏற்று வாழவும் திருக்குறளும் கொலை மறுத்தலும் வழிகாட்டுகிறது.

**கொல்லாமை அறம்**

இருள்சேர் இன்னா உலகமாகிய நரகத் துன்பத்தில் சேர்வதற்கு அஞ்சிய நன்மக்கள் உயிர்களைக் கொலை செய்வதற்கு அஞ்சுவர். கொல்லாமை அறத்தை வள்ளுவர்

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாராப் பொய்யாமை நன்று" குறள் - 323

என்றும்>

"அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்" குறள் - 321

எனவும் கூறியுள்ளார். இதனைக் கருத்தில் கொண்டவர்கள் தமிழ்மறையாகிய திருக்குறள் வழங்கிய அறநெறியில் வாழ முற்படுவர். அவர்கள் பின்பற்றி வாழ்ந்து நலம் பெறுதற்காக எழுது மறையாகிய திருமுறை நெறியில் தமிழ் ஆகமங்கள் வழியில், தொல்காப்பியம் கூறும் இலக்கணமும், பொருளிலக்கணமும் அமையக் கொலை மறுத்தல் அமைகிறது

அன்புடைமையைக் கொண்டு எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு உலகியல் வாழ்வில் பற்றுக்களை நீத்து, துறவுநெறியில் நிற்றல் வேண்டும். எனவே இல்லற நெறியில் வாழ்வோரும் அன்பால் நெகிழ்ந்து கொலை ஆதி அகன்ற ஞான நெறியில் வாழ்வாருக்கு உண்மை நூலாகிய திருக்குறளும் தொன்னூலாகிய தொல்காப்பியமும் வகுத்துக் கூறிய முறையில் இயற்றியமையை

"அறங்கொலைமை தள்ளிச் சார்தற்கு
அருமறையாகம நெறிச்சொற் பொருளமைத்திக்
கொலை மறுத்த லறஞ்சொன் மாண்பான்"

கொலை மறுத்தல் பா.எண் - 01

எனக் குருவருளைத் தலைமிசைக் கொண்டு குறிப்பிட்டுள்ளார்.

**எத்தகைய பதவியெனினும் வேண்டேன்**

இம்மை, மறுமை வாழ்வுக்குரிய தன்மைகளையும் மென்மேலும் உயர்ந்து மேலெனப்;படும் வானுலகப் பதவிகளைத் தருவதாயினும் மேல் வழி உணர்ந்து கீழ்மை விலக்கி அருள் நெறியில் வாழும் சான்றோர்கள் உயிரைக் கொல்வதை ஏற்க மாட்டார்கள் என்பதை,

"……………..ஞானங்
கூர்ந்தவர்வான் சிறப்பெனினுங் கொலையின் வரு
மெனிற்கடையாய்க் கொள்வ ரன்றே" கொலை மறுத்தல் பா.எண் - 01

என அருளியுள்ளார். மெய்யுணர்வினை மிகுதியும் உடையவர்களாகிய அருளாளர்கள் கொலை மேலுலகமாகிய உயர் பதவிகளைத் தரும் என்றாலும் அக்கொள்கையைக் கீழானதாகவே கருதுவார்கள் ஏன்பதை அருளாளர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

"நிலையாம் புலமைகொள் வள்ளுவர்மூலர் நிகழ்த்து சைவத்
தலையாய மூவர் திருவாதவூரர் தரு தமிழுள்
இலையாக ஆகமாதியும் கூறா உனக்கு இவ்விருநிலமேல்
கொலையாதி ஞானி பணலாம் என்றார்எவர் கூறுகவே"

ஏன அருட்பிரகாசம் என்னும் நூல் கூறுகிறது. மேலும் தமிழலங்காரம்>

"நான்முகன் தக்கன் முதலோர் அநேகர் நவின்றவட
நூன்முழுது தும்கொலை வேள்வியைப் போற்றும் நுடங்கரிய
வேன்முனைக் கண்ஔளவை வள்ளவன் ஆதியர் விண்டதென்னூல்
ஊன் முழுப் பாவம் எனவே அடிக்கடி ஓதிடுமே"

தமிழலங்காரம்> பா.எண் - 04

என்று கூறுகிறது. கொல்லாமையை வலியுறுத்தும் முதல் நூலாகத் திகழ்வது திருக்குறள்.

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கோன்றாகும் ஆக்கம் கடை" குறள் : 328

என அருளிய உண்மை நூலாகிய திருக்குறள் நெறியில் நின்று அக்குறட்பாவினைக் கருத்தில் கொண்டு 'ஞானம் கூர்ந்தவர் வான் சிறப்பெனினும் கொலையின் வரும் எனில் கடையாக் கொள்வர் அன்றே' என்று சாந்தலிங்கர் வலியுறுத்துகிறார்.

கொலை மறுத்தலாகிய கொள்கையை உலகில் வாழ்வாங்கு வாழும் அறநெறியாளர்கள் எல்லோரும் ஏற்க வேண்டும் என்பதைத் தாயுமானவ அடிகள்

:கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்க
எல்லார்க்கும் சொல்லுவது என்னிச்சை பராபரமே"

பராபரக்கண்ணி பா. எண் - 54

என்று அருளியுள்ளார்;. வுள்ளலார் கொலை செய்வோரை உறவினர் அல்லர். புறவினர் என்கிறார்.

இதனைப் பின்பற்றி அருளாளர்கள் பலரும் கொல்லாமையை வலியுறுத்தியுள்ளனர். மேலும்>

“எத்துணையும் பேதமுறா தெவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்”        திருவருட்பா> பா. எண் - 5298

ஏன்று பொதுநெறியை விளக்கி உயிர்க்கொலையும், புலைப்பும் உடையவர்கள் உறவினர் அல்லர். மேலும் இக்கொள்கையைப் பெரிதும் வலியுறுத்தி, ‘தமது சித்து வலிமையால், ஒரு பெண்ணை ஆணாக மாற்றும் தவ ஆற்றல் உடையவராயினும் பதைபதைக்க உயிரினங்களைக் கொன்று உண்ணும் கருத்துடையவர்களை இரும்பாகிய கொலைவாளினால் ஓர்உயிர் நலிந்து அழியக் கொன்று உண்பவர்களைப் பிறர் தலைவர் என்று போற்றினாலும் அவரை ஞானியென்று கூறுவதாகாது என்பதனை>

“மருவானைப் பெண்ணாக்கி ……………….
கருவானை யுறஇரங்காது உயிருடம்பைக் கடிந்துண்ணும் கருத்தனேல்
எங்              குருவாணை எமதுசிவக் கொழுந்தானை ஞானி எனக்
கூறொணாதே”

என அருளியள்ளார். அவர் காலத்து வாழ்ந்தவரும் இலக்கணம்> இலக்கியம்> வரலாறு> பக்தி நூல்கள் எனப் பல்லாயிரம் பாடியவருமான வண்ணச்சரபம் முருகதாச அடிகள் கொல்லாமை நெறியில் தவறாது நின்றவர். இவர் கொல்லாமையை உயிர்ப்பலி செய்த கோயில்கள் தோறும் தடுத்து சிறப்புக்குரிய ஆணையிட்டவர். இதனை>

“கொலைகண்டு மாமிசம் உட்கொண்டு உவக்கவேண்டா
நிலைகண்டு மெய்யருளில் நில்”          என்றும்
“கொல்லா விரதக் குணமே தவமாகும்
அல்லால்மற் றெல்லாம் அவமாகும்”   அருளாட்சி – 32

அருளியுள்ளார். இதேபோன்று கோயில்களில் கொலை செய்தலைத் தடுத்துப்பாடிய பாடல்கள் பல உள்ளன.

கொலைத்தொழில் உடையவராகிக் கொடிய அரக்ககுணம் உடையவர்களைக் கருணையாளராக மாற்றுவதில் நரகமே வந்தாலும் ஏற்றுக்கொள்வேன். அதுவே நல்லநெறி. அவ்வாறு மாற்றாமல் முத்தியில் உயர்ந்ததாகிய சொரூப சித்தி கிடைத்து நல்நிலை எய்தினாலும் என்னைப் பொருத்தவரை எந்த முத்தியும் சிறப்பில்லாதது என்கிறார்.

திருவள்ளுவருக்குப் பிறகு கொலைமறுத்தலில்> கொல்லாமை, புலால் மறுத்தலாகிய கொள்கைகளைப் பெரிதும் வலியுறுத்தியவர் சாந்தலிங்கர். ‘அருளொடு புணர்ந்த அகற்சியானும்’ என்ற தொல்காப்பிய நெறியில் மனையறத்தில் அன்பால் உயர்ந்து அருளொடு வாழ்ந்து உலக வாழ்க்கையை நீத்து, துறவு மேற்கொண்டவர்கள் தவறாது பின்பற்ற வேண்டிய நெறியாகும். வாழ்வை வெறுத்துத் துறவு பூண்டு ‘காமம் நீத்த பாலினாலும்’ என்ற தொல்காப்பிய நெறியில் ஐம்புல ஆசைகளை நீக்கி முழுத் துறவு மேற்கொண்டு செம்பொருள் காண்போரும் தவறாது மேற்கொள்ள

வேண்டிய நெறி கொல்லாமை என்னும் அறநெறிநெறியாகும்.

**பார்வை நூல்கள்**

சாந்தலிங்கர் - கொலை மறுத்தல் - குமாரதேவர் பதிப்பகம்

பேரூராதீனம்- கோவை

தண்டபாணி சுவாமிகள் - தமிழலங்காரம் -மணிவாசகர் பதிப்பகம்-சென்னை

தண்டபாணி சுவாமிகள்-அருளாட்சி -;தவத்திரு முருகதாச அடிகள் முத்துவிழா மலர் -கௌமார மடாலயம்- கோவை

தாயுமானவ சுவாமிகள் –பராபரக்கண்ணி- ;சாரதா பதிப்பகம்

சென்னை -முதல் பதிப்பு மே 2010

திருவள்ளுவர் – திருக்குறள் - விசயா பதிப்பகம் -கோவை

வள்ளலார் –திருவருட்பா - திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம் – வடலூர் - கடலூர்